# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No.DVC.1/2021 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | ம.சா.1 |
| Name | : | கலைமகள் |
| Father's Name | : | க/பெ.சசிக்குமார் |
| Village | : | திண்டிவனம் |
| Taluk | : | திண்டிவனம் |
| Caste | : | |
| Calling | : | - |
| Religion | : | இந்து |
| Age | : | 34 |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of **16.09.2025.**

**எதிர்மனுதாரர் ஆஜர் இல்லை.**

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்படி மனுவில் மனுதாரர் ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணைக்காக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். படித்து பார்த்துதான் கையொப்பம் போட்டேன். எனது தரப்பு ஆவணங்களாக 1. திருமண அழைப்பிதழ் - அசல், 2) குடும்ப புகைப்படம் - அசல், 3) யாஷ்மிதா பிறப்பு சான்று நகல், 4) மனுதாரர் ஆதார் அட்டை நகல், 5) மனுதாரர் வந்தவாசி மகளிர் காவல் நிலையத்தில் அளித்த புகாருக்கு

வழங்கிய சி.எஸ்.ஆர் ரசீது நகல், 6) மனுதாரர் தெள்ளார் காவல் நிலையத்தில் அளித்த புகாருக்கு வழங்கிய சி.எஸ்.ஆர் ரசீதும் புகார் மனுவின் நகலும் நகல், 7) 08.11.2020 அன்று மனுதாரருக்கு வந்தவாசி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்ததற்கான சான்று அசல், 8) மனுதாரர் மகளிர் காவல் நிலையத்தில், அளித்த மனு மாவட்ட சமூக நல அலுவலகத்திற்கு அனுப்பி வைத்த கடிதம் நகல், 9) மனுதாரர் திருவண்ணாமலை மாவட்ட சமூக நல அலுவலகத்திற்கு அனுப்பிய புகார் மனு நகல், 10) எதிரிகள் வசம் மனுதாரரின் பெற்றோர் மனுதாரருக்கு வழங்கிய சீர் வரிசை பொருட்கள் பட்டியல் அசல், 11) 1ம் எதிர்மனுதாரரின் சம்பவ சான்றிட்ட அசல். மனுபடி தீர்பாக பிரார்த்திக்கிறேன்.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

சமூக நலத்துறையில் என்னால் கொடுக்கப்பட்ட மனுவில் உள்ள விவரங்கள் எனக்கு முழுமையாக தெரியுமா என்றால் தெரியும். எனது மனுவினை கையால் எழுதினேனா அல்லது டைப் அடித்து கொடுத்தேனா என்றால் கையாலும் மற்றும் டைப்பாலும் எழுதி கொடுத்தேன். மேற்படி நான் கொடுத்த இரண்டு மனுவில் எந்த மனு நீதிமன்றத்திற்கு வழக்கு பதிவு செய்ய சமூக நலத்துறையால் அனுப்பப்பட்டது என்றால் நான் மனுவினை சமூக நலத்துறையில் கொடுத்துவிட்டேன் எந்த மனுவினை அனுப்பினார்கள் என்று எனக்கு தெரியாது. சமூக நலத்துறையில் நான் 20.11.2020ம் தேதியிட்டு கொடுத்த மனுவில் நானும் எனது கணவரும் திருமணத்திற்கு பிறகு 4 மாதங்கள் சந்தோஷமாக குடும்பம் நடத்தியதாக குறிப்பிட்டிருந்தேன் என்றால் சரிதான். என் திருமண தேதி 29.06.2015ஆம் தேதி ஆகும். மேற்படி திருமணம் ஆன தேதியில் இருந்து 4 மாதங்கள்தான் சந்தோஷமாக வாழ்ந்தோம் என்றால் சரிதான். இந்த காலகட்டத்தைதான் எனது மனுவில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நானும் 1ம் எதிர்மனுதாரர் சசிக்குமாரும் ஒருவரை ஒருவர் காதலித்து திருமணம் செய்து கொண்டோம் என்றால் சரிதான். பொதுவாக காதல் திருமணம் செய்துக்கொண்டவர்கள் எந்தவொரு எதிர்பார்ப்பும் இல்லாமல்தான் திருமணம் செய்துகொள்வார்கள் என்றால் சரிதான்.

நானும் 1ம் எதிர்மனுதாரரும் ஒரே சமுகத்தை சார்ந்தவர்கள். 1ம் எதிர்மனுதாரர் பணிபுரியும் பள்ளிக்கு நான் ஆசிரியர் பட்டய கல்வி பயிற்சிக்காக சென்றபோது ஒருவருக்கொருவர் பழக்கம் ஏற்பட்டு காதலித்தோம் என்றால் சரிதான். அதன் அடிப்படையில்தான் எனக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். அதனால்தான் எந்தவொரு எதிர்பார்ப்பும் இல்லாமல் திருமணம் செய்துகொண்டார் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் என்னை காதலித்ததால் எந்தவொரு சீர்வரிசை பொருட்களும் வாங்காமல் சொந்த செலவிலேயே என்னை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் வசதியான நபர் என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு 50 ஏக்கருக்குமேல் நிலம் இருக்கும் என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு நெல் அறுவடை செய்யும் அறுவடை இயந்திரம், டிரேக்டர் உள்ளது என்றால் சரிதான். என் தகப்பனார் வீடு மாடி வீடு என்றால் சரிதான்.

1ம் எதிர்மனுதாரர் சசிக்குமார் வீடு ஓட்டு வீடு என்றால் சரியல்ல மாடி வீடுதான். 1ம் எதிர்மனுதாரரின் தாயார் ஒரு கேன்சர் நோயாளி என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது திருமணத்தின்போது அவர் படுத்தபடுக்கையாகதான் இருந்தார் என்றால் சரியல்ல. எனது மாமனார் வயதானவர். அவர் கழனி வேலை தான் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. 1ம்

எதிர்மனுதாரரின் சகோதரிகளுக்கு எனது திருமணத்திற்கு முன்பே அவர்களுக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். ஆனால் 1ம் எதிர்மனுதாரரின் மூத்த சகோதரி அவர் கணவருடன் 1ம் எதிர்மனுதாரர் வீட்டில்தான் இருந்து வருகிறார். 1ம் எதிர்மனுதாரரின் மூத்த சகோதரி 1ம் எதிர்மனுதாரரின் குடும்பத்துடன் வசித்து வருவதற்கான ஆவணங்கள் ஏதும் நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எரம்பலூர் கிராமத்தில் உள்ள மாணவர்களும் ராமசமூத்திரத்தில் உள்ள மாணவர்களும் படிப்பதற்காக நல்லூர் கிராமத்திற்குதான் வரவேண்டும் என்றால் சரிதான்.

ராமசமூத்திரத்தில் இருந்து நல்லூர் கிராமத்திற்கு வருவதற்க 1/2 பர்லாங் தூரம் என்றாலும் எரம்பலூர் கிராமத்தில் இருந்து நல்லூர் கிராமத்திற்கு வருவதற்கு சுமார் 4 கிலோ மீட்டர் இருக்கும் என்றால் சரியல்ல. ராமசமூத்திற்கு நல்லூர்தான் தூரம் ஆகும். ராமசமூத்திரத்தில் இருந்து நல்லூர் கிராமம் 1/2 பர்லாங் என்பதால் மேற்படி 1ம் எதிர்மனுதாரரின் சகோதரியின் பிள்ளைகள் நல்லூர் கிராமத்தில் படித்து வருவதை மறைத்து ராமசமூத்திரத்தில் படித்துவருவதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கும், எனக்கும் எப்போது குழந்தை பிறந்தது என்றால் 29.03.2016ம் தேதி ஆகும்.

நான் வசதியான குடுமபத்தில் வளர்ந்த பெண் என்பதால் 1ம் எதிர்மனுதாரரின் குடும்பத்தில் மாமனார், மாமியாரை மதிக்காமல் மற்றும் சமையல் வேலைகூட செய்யாமல் ஜாலியாக இருந்து வந்தேன் என்றால் சரியல்ல. அவ்வாறு பல்வேறு கொடுமைகள் நான் செய்திருந்தாலும் 1ம் எதிர்மனுதாரர் என்னை காதலித்து திருமணம் செய்ததால் அனைத்தையும் பொறுத்துக்கொண்டு என்னோடு சேர்ந்து வாழ்ந்து வந்தார் என்றால் சரியல்ல. என்னை நன்றாக படிக்க வைக்கவேண்டும் என்ற எண்ணத்தில் 1ம் எதிர்மனுதாரர் ஆற்காடு தாலுக்கா கலவை ஆதிபராசக்தி கல்லூரியில் எம்.பில் படிக்க வைத்தார் என்றால் சரிதான். குழந்தை பிறந்து ஒரு ஆண்டுகளம் 1ம் எதிர்மனுதாரருடன் சந்தோஷமாக வாழ்ந்து வந்தேன் என்றால் சரியல்ல. அடிக்கடி என்னை எனது தாயார் வீட்டிற்கு அனுப்பிவிடுவார்.

2016ம் ஆண்டு முதல் நான் 1ம் எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து எனது தாயார் வீட்டில் வாழ்ந்து வந்ததால் என்னோடு சேர்ந்து வாழவேண்டும் என்ற எண்ணத்தில் 07.11.2018ம் தேதி ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு எனக்கு அனுப்பினார் என்றால் சரிதான். எனக்கு அறிவிப்பு வந்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. 3 மாதத்திற்கு பிறகு தெரிந்துகொண்டேன். 13.11.2018ம் தேதி மேற்படி அறிவிப்பினை பெற்றுக்கொண்டு 20.11.2018ம் தேதி ஒரு பதில் அறிவிப்பை 1ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பினேன் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பிற்கு பிறகுதான் 1ம் எதிர்மனுதாரர் எனக்கு எதிராக செய்யாறு சார்பு நீதிமன்றத்தில் எச்.எம்.ஓ.பி.எண்.85/2019 என்ற எண்ணில் விவாகரத்து கோரி மனுதாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். நான் என் கணவரை விட்டு பிரிந்திருந்த நேரத்தில் சென்னை கேளம்பாக்கத்தில் ஆசிரியராக வேலைபார்த்து வந்தேன் என்றால் சரிதான். தற்போது நான் அந்த வேலையில் இல்லை.

சென்னை கேளம்பாக்கத்தில் என் சகோதரி ஒருவர் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். நான் தற்போது எனது சகோதரியின் வீட்டில்தான் குடியிருந்து வருகிறேன். 2018ம் ஆண்டுமுதல் என் கணவரை விட்டு பிரிந்து தனியாகவும், தற்போது சென்னையிலும் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். ஆனால் பலமுறை எனது கணவருடன் வாழ முயற்சி செய்தேன்.

நான் என் கணவருடன் சேர்ந்து வாழ சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்தேனா என்றால் நடவடிக்கை எடுத்தேன் ஆனால் என் கணவர் அதனை புறக்கணித்துவிட்டார். நான் 1ம் எதிர்மனுதாரரை விட்டு 2018ம் ஆண்டு முதல் பிரிந்து வாழ்ந்து வருவதால் அவர் எனக்கு எதிராக விவாகரத்து வழக்கு தாக்கல் செய்திருந்தார் அதனை மறைத்து நான் 07.11.2020ம் தேதி 1ம் எதிர்மனுதாரரின் வீட்டிற்கு சென்றதாக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. விவாகரத்து வழக்கு உத்தரவான பிறகு நான் 1ம் எதிர்மனுதாரரின் வீட்டிற்கு செல்லவேண்டிய அவசியம் ஏற்படாது என்றாலும், 1ம் எதிர்மனுதாரரின் குடும்பத்தார்மீது வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்பதற்காக நான் பொய்யாக சென்றதாக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

எதிர்மனுதாரரின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.